உ

ஸ்ரீ ராமஜெயம்

நாராயண நாமாவளி



அன்பளிப்பு :

SM. மெய்யம்மை ஆச்சி

"ஜெயம் இல்லம்"

4. பி.ஆர்.எம்.எல். தெரு,

காரைக்குடி.

[illegible]

[illegible]

[illegible]

உ

ஸ்ரீராமஜெயம்

காப்பு

ஸ்ரீ நாராயணு ஓம் ஆதிநாராயணு ஓம்
ஜோதி நாராயணு ஓம் தீப நாராயணு ஓம்
சூரிய நாராயணு ஓம் சங்கர நாராயணு ஓம்

ஹரி ஹரி நாராயணு ஓம் ஹரி ஹரி நாராயணு ஓம்
நல்ல புத்தி தர வேண்டும் நாராயணு
நல்ல சுகம் தர வேண்டும் நாராயணு
உனே நான் துதிக்க வேண்டும் நாராயணு
உலகினேப் படைத்தவரே நாராயணு
இருளே ஒழித்தவரே நாராயணு
இருப்பதெல்லாம் உன்னுடையது நாராயணு
இனிப்பிறவாமல் நான் இருக்கவேண்டும் நாராயணு
எங்கும் நிறைந்தவரே நாராயணு
எப்போதும் உனே, மறவாது இருக்க வேண்டும்
நாராயணு

ஈசன் அருள் புரிய வேண்டும் நாராயணா
எல்லோரும் நன்கு இருக்க வேண்டும் நாராயணா
ஏழைக் கிரங்க வேண்டும் நாராயணா
ஏழைமுகம் பார்க்க வேண்டும் நாராயணா
என் துயரம் தீர்க்க வேண்டும் நாராயணா
எந்த நோயும் வராமல் காக்க வேண்டும் நாராயணா
எனது உயிர் பிரியுமுன் நினைவு தடுமாறிவிடும்
நாராயணா

உன்னையே அதுசமயம் நினைக்கவேண்டும் நாராயணா
என் குறைகளை உன்னிடம் அப்போது சொல்வதை
இப்போதே சொல்லி வைத்தேன் நாராயணா
கங்காஸ்னானம் ஆடவேண்டும் நாராயணா
காசிக்குப் போய் கைலாசம் போகவேண்டும்
நாராயணா

கஷ்டங்கள் தீர்க்க வேண்டும் நாராயணா
கவலைகள் ஒழியவேண்டும் நாராயணா
கண்ணும் கருத்தும் விளங்கவேண்டும் நாராயணா

கவிதையிலே உன் நாமம் வாழவேண்டும் நாராயண
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருகவேண்டும்
நாராயண

திசைமுழுதும் ஒளிவீசும் நாராயணா
திவ்விய தரிசனம் தினம் தருவாய் நாராயணா
திருநாமம் கேட்க செவிவேண்டும் நாராயணா
திவ்விய மங்கள சொரூப நாராயணா
தெய்வத்தை நம்பினேன் நாராயணா
செய்தவினை தீரவேண்டும் நாராயணா
சுற்றமெல்லாம் நீடூழி வாழவேண்டும் நாராயணா
சிந்தை கலங்காது இருக்க வேண்டும் நாராயணா
சிவாய நமவென்று சிந்திக்கவேண்டும் நாராயணா
ஜெப தபம் செய்யவேண்டும் நாராயணா
தேவாரம் திருப்புகழ் செய்யவேண்டும் நாராயணா
தீயோர் பழக்கத்தை தீர்க்கவேண்டும் நாராயணா

நல்லோர் பழக்கத்தை நாடவேண்டும் நாராயணா
ராமநாமம் ஜெபிக்கவேண்டும் நாராயணா
நல்ல சொல் சொல்ல வேண்டும் நாராயணா
கோபுரத்தைக் கண்டால் கைகூப்பிக்க வேண்டும்
நாராயணா
கோவிலுக்கு அறுகு நான் கொடுக்கவேண்டும்
நாராயணா
கோபம் குறையவேண்டும் நாராயணா
குணம் கொண்டு வாழ வேண்டும் நாராயணா
பக்தியோடு கையுனையே கூடவேண்டும் நாராயணா
பாபங்கள் தீர வேண்டும் நாராயணா
பஞ்சமூர்த்தி காட்சி பார்க்கவேண்டும் நாராயணா
பர்த்தாவிற்கு நான் பணி செய்ய வேண்டும்
நாராயணா
தான தருமம் செய்ய வேண்டும் நாராயணா
சாந்தமும் சற்குணமும் உள்ள சந்தானம்
தாவேண்டும் நாராயணா
சந்திர பகவானே சரணம் சரணம்

4-2

சத்திய நாராயண மூர்த்தியே சரணம்

சரணம் சரணம் சுவாமியே சரணம்

குருவாயூர் தன்னில் கோயில் கொண்டோய் சரணம்

இருவேதனை வாட்டாமல் என்றும் காப்பாய் சரணம்

காலையில் எழுந்து கதிரவனை வணங்க வேண்டும்

காலையில் புறப்பட்டு மாலையில் மறைகின்ற
நாராயணா

கலியுகத்தில் பிறந்து கன்னியாகுமரி கடல் கரையில்

உதிக்கின்ற காட்சிதனை காணுகின்றோம் நாராயணா

கிருதயுகத்தில் கிழக்கே உதித்த நாராயணா

கிருபைகள் கிடைக்க வேண்டும் நாராயணா

குத்து விளக்கேற்றி கும்பிடவேண்டும் நாராயணா

குறைவற்ற செல்வத்தை கொடுக்க வேண்டும்
நாராயணா

கொடிமரத்தின் முன்நின்று கும்பிடவேண்டும்
நாராயணு

மழலைமொழி கேட்கவேண்டும் நாராயணு

மகளுடைய குறைகளை எல்லாம் தீர்க்க வேண்டும்
நாராயணு

மாதா பிதாவை நான் வணங்க வேண்டும்நாராயணு

மார்கழிநீர் ஆடவேண்டும் நாராயணு

குளிர் என்று பாராமல் குளிக்க வேண்டும் நாராயணு

பனி என்று பாராமல் பஜனை செய்யவேண்டும்
நாராயணு

கடும் சொல் இன்றி காலம் கழிக்கவேண்டும்
நாராயணு

இனிய சொல் பேசி இருக்கவேண்டும் நாராயணு

அதிகாலை திருப்பணிக்கு அடியேன் போகவேண்டும்
நாராயணு

அம்பாள் கடாக்ஷம் கிடைக்கவேண்டும் நாராயணு

அன்னதானம் செய்யவேண்டும் நாராயணு
அதற்கு மனம் செல்லவேண்டும் நாராயணு
அனைவர்க்கும் அன்பு காட்டவேண்டும் நாராயணு
ஆனைமுகத்தோனை அனுதினமும் காணவேண்டும்
நாராயணு
ஆதிபகவானே ஆனந்த நாராயணமூர்த்தியே
நாராயணு
ஆவலாய்ப் பாடினேன் நாராயணு
ஆலயம் செல்லவேண்டும் நாராயணு
ஐந்தெழுத்தை ஓதவேண்டும் நாராயணு
அருட்தலங்கள் செல்லவேண்டும் நாராயணு
அலங்கார தீபம் கிடைக்கவேண்டும் நாராயணு
அர்ச்சனை ஆராதனை செய்யவேண்டும் நாராயணு
ஆண்டவனே உன்னருளை வேண்டுகிறேன்
நாராயணு
பூஜைமணி அடித்தால் பிரார்த்திக்கவேண்டும்
நாராயணு

பிரதோஷ பிரதட்சணம் போகவேண்டும் நாராயணு
பூத்தமலர் கொய்து நான் பூஜிக்கவேண்டும்
நாராயணு
புத்திர பாக்கியம் பெறவேண்டும் நாராயணு
பிறர்க்கு உபகாரம் செய்யவேண்டும் நாராயணு
பொறுமை தரவேண்டும் நாராயணு
நிமிர்ந்து ஜெபம் செய்யவேண்டும் நாராயணு
நின்று திருவிளக்கு ஏற்றவேண்டும் நாராயணு
ஏற்றி ஹர ஹரா எண்ண வேண்டும் நாராயணு
எல்லே இல்லா மகிழ்வு கொண்டேன் நாராயணு
உறவினரின் ஒற்றுமையை வேண்டினேன்
நாராயணு
ஒன்றே செய்யினும் நான் நன்றே செய்யவேண்டும்
நாராயணு
ஓங்கார ஒலியான நாராயணு
உமையவள் முன்ஞேனே நாராயணு

உலகெல்லாம் பவனிவரும் நாராயணு
பகல் முழுதும் ஒளிவீசும் நாராயணு
பக்தர்களுக்கு அருள்வீசும் நாராயணு
பராசக்தி அருள்வேண்டும் நாராயணு
பிராணபயம் தீர்க்கவேண்டும் நாராயணு
பகவானே உனைப்பாடி நாடினேன் நாராயணு
நாராயணு போற்றி நலஞ்செய்வாய் போற்றி
பத்திரி நாராயணு போற்றி பகவானே போற்றி
போற்றி

ஓம் நாராயணு ஓம் நாராயணு ஓம்
,, நமோத்து சிந்தம்
,, அன்னை பராசக்தியே நமஸ்த்தே
,, அபிராமி அம்பிகையே நமஸ்த்தே
,, அழகிய தேவியே நமஸ்ந்தே
,, அகிலாண்ட ஈஸ்வரியே நமஸ்த்தே
,, அமிர்தத்தம்மாளே நமஸ்த்தே
,, அலமேலு மங்கையே நமஸ்த்தே

ஓம் அன்னபூரணித் தாயே நமஸ்தே
அந்தர நாச்சியே நமஸ்தே
ஆதி பரமேஸ்வரியே நமஸ்தே
இறைவனின் தேவியே நமஸ்தே
ஈஸ்வரியே நமஸ்தே
உமாதேவியே நமஸ்த்தே
உண்ணாமலைத் தாயே நமஸ்தே
உலக நாயகியே நமஸ்தே
ஊர்வசியே நமஸ்தே
எம்பெருமாட்டியே நமஸ்தே
ஏகாம்பிகையே நமஸ்தே
ஐஸ்வர்ய லெக்ஷ்மியே நமஸ்தே
ஒப்பிலாம் பிகையே நமஸ்தே
ஓம்காரசக்தியே நமஸ்தே
ஔவைப் பிராட்டியே நமஸ்தே
அன்னை அன்னை அன்பினுக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு மங்களம்.